# பத்திரிகை செய்தி

குழும இயக்குநர், தேசிய நலவாழ்வுச் சங்கம், சென்னை-6 அவர்களால் சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நகராட்சிக்குட்பட்ட நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு முழுவதும் ஒப்பந்த அடிப்படையில் ஒரு இயன்முறை சிகிச்சையாளர் (**Physiotherapist**) பணியிடத்திற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து சிவகங்கை மாவட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு இயன்முறை சிகிச்சையாளர் பணியிடத்தினை ரூ. 14,500/ ஒப்பந்த ஊதியத்தில் பணி நியமனத்திற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இப்பணியிடத்திற்கு தமிழ்நாடு எம்.ஜீ.ஆர் மருத்துவக்கல்லூரியால் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளில் **BPT Course (Bachelor in Physiotherapy)** படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். பணியிடத்திற்கான விண்ணப்ப படிவம் சிவகங்கை மாவட்ட வலைதளம் **Sivaganga.nic.in** வேலைவாய்ப்பு பிரிவில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். மேலும் சிவகங்கை துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் அலுவலகத்திலும் விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தகுந்த ஆவண நகல்களுடன் செயலாளர், மாவட்ட நலவாழ்வு சங்கம் / துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள், சிவகங்கை அலுவலகத்தில் 20.12.2021 முதல் 27.12.2021 மாலை 05.00 மணி வரை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தலைவர், மாவட்ட நலவாழ்வு சங்கம்
மாவட்ட ஆட்சியர், சிவகங்கை